**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.34
https://ngmtamil.in/

# பண்டைய தமிழர்களின் வானியல் கூறுகள்

**முனைவர் க.கனகராஜ்.,**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, வி.எல்.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி),

கோயமுத்தூர்.

பண்டைய இலக்கியங்கள் அனைத்தும் சமூகத்தின் பிரதிபலிப்பாகவே காணப்படுகிறது. அவை இன்றைய காலக்கட்டத்திற்கு ஏற்ப உலக மொழிகளின் வரிசையில் தமிழ் நிலைத்த வண்ணமாக அமைவதற்கு காரணம், தமிழ் இலக்கியங்களே ஆகும்.

இன்றைய அறிவியல் உலகில் வெற்றிக்கும், வளமைக்கும், ஆக்கத்தையும் ஊக்கத்தையும் தருவதாகவும், விண்ணில் சென்றும் வாழலாம் என்ற எண்ணம் மனிதனுக்கு தோற்றுவிப்பதும் அறிவியலே ஆகும். ஆனால் அறிவியல் கருவிகளும், அறிவியல் வளர்ச்சியும் மிகுதியாக அறியப்படாத காலக்கட்டத்தில் இயற்கையின் பன்முக வடிவங்களைக் கண்டு காலத்தை கணித்த தமிழனின் கணிப்பிணை இவ்வாய்வின் மூலமாக உணர்ந்து கொள்ளலாம்.

இன்றைய வாழ்வு மனிதனையும், அறிவியலையும் தனித்தனியாகப் பிரிக்க முடியாத அளவிற்கு ஒன்றிவிட்டது. இலக்கியங்கள் வாழ்க்கையை எளிமைப்படுத்துகிறது. அறிவியல் மனிதனின் வசதிகளை பெருக்கிக் கொடுக்கிறது. இலக்கியத்தையும், அறிவியலையும் ஒப்பிட்டுக் காண்கையில் சில முரண்பாடுகள் காணப்படினும் ஆராய்ச்சி அணுகுமுறைகளுக்கு அறிவியல் நெறிகள் துணையாக இருக்கின்றன.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய தொல்காப்பியத்தில் அறிவியல் நுன்னறிவும், ஆர்வமும் வெளிக்கொணரும் விதமாக அமைந்துள்ளது. தொல்காப்பிய இலக்கணத்தில் முதல், கரு, உரி எனப் பொருள்களின் பாகுபாடுகள் வழி நிலத்தையும், பொழுதினையும் கொண்டு அமைந்துள்ளது. இவை பண்டைய தமிழரின் கூர்ந்த அறிவியல் அறிவுக்கு சான்றாக விளங்குகிறது. “மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியினாற்றிய அறிவன்” என்ற சொல்லின் வழி அறிஞர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் வானியல் கூறுகளை அறிவியல்வழி ஆய்ந்து பாராட்டப்பட்டவர்கள் தமிழர்களே என்ற கருத்தினை தொல்காப்பியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

மேலும், **“யாண்டு”** என்னும் பெருங்காலப் பகுதி ஆறகாலப் பகுப்புகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. இளவேனில், முதுவேனில், கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம் என்று ஆறுவகை பெரும் பொழுதுகளை உள்ளடக்கிப் பன்னிரண்டு மாதங்களாகவும், ஒரு நாளினை வைகறை, விடியல், நண்பல், ஏற்பாடு, மாலை, யாமம் என்று ஆறாக சிறும்பொழுதாக வகுத்துள்ளான் தமிழன். பகலிரவால் நாளையும், வளர்பிறை, தேய்பிறை எனக் கொண்டு மாதத்தினையும் சூரியன் சஞ்சரிக்கும் காலத்தால் ஆண்டையும் வகுத்துள்ளனர். இவற்றின் வாயிலாக ஏழு கோள்களின் பெயராலும் ஒவ்வொரு கிழமைகளின் பெயரும், பன்னிரு ஓரைகளால் பன்னிரண்டு மாதங்களாக குறிப்பிட்டுள்ளனர். ஞாயிறு, திங்கள் ஆகிய இரண்டையும் ஆராய்ந்து,

**“காலம் உலகம் உயிரே, உடம்பே**
**பால்வரை தெய்வம், வினையே, பூதம்**
**ஞாயிறு, திங்கள், சொல் வரூஉம்” (தொல்.கிளவி: 58)**

என தொல்காப்பியர் எடுத்துரைக்கிறார். மாதத்தை திங்கள் என்றும் கூறியுள்ளார். திங்கள் என்ற சொல் சந்திரன் என்ற கோளினையும் குறிக்கும். அரிச்சந்திரனின் இயக்கத்தால் மாதங்கள் கணக்கிடப்பட்டுள்ளது. மாசி மாதம் பகல் நேரம் குன்றியும், இரவு நேரம் மிகுந்தும் இருக்கும் என்பதை,

**“பகல் நீடாகாது இரவுப் பொழுது பெருகி**
**மாசி நின்ற மாகூர் திங்கள்” (பதிற்று. 59)**

என பதிற்றுபடால் வரிகள் விளக்குகிறது. ஆனால் மங்கையர்கள் நேரத்தை நாழிகை வட்டிலை கொண்டுதான் அறிந்து வைத்துள்ளனர். என மாங்குடி மருதனார் தன் நூலின் வழி எடுத்துரைக்கிறார். பௌர்ணமி நாளில் கடல் சீற்றத்தோடு தான் இருக்கும் என்ற தமிழின் நுன்னறிவு கருத்தினை,

**“இரவுத்தலை மண்டில் பெயர்ந்தென உரவுத்திரை**
**எறிவகை போல வரூஉம்” (நற்.375: )**

நற்றிணை பாடல்வரி தெரிவிக்கிறது. ஞாயிற்றை மையமாக வைத்துதான் மற்ற கோள்களின் இயக்கமே பருவகால மாற்றத்திற்குக் காரணமாகின்றது. இதனை,

**“வானில் விசும்பில் கோன்மீன் சூழ்ந்த**
**எறிவகை போல வரூஉம்” (சிறுபாணாற்றுப்படை: 242)**

என்ற பாடலடிகள் உணர்த்துகிறது.

மேலும், மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை சடங்கு முறைகளை நல்ல காரியம் செய்யும் முன் நல்ல நேரம் பார்ப்பது தமிழர்களின் பழக்கங்களில் ஒன்றாகும். மன்னன் போருக்கு புறப்படுவதற்கான நேரம் பார்க்கின்றான். போருக்குச் செல்லும் முன் நிகழும் நிகழ்வினைப் பற்றி

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

தெரிவிக்கையில், போருக்குச் செல்லும் காலம் கணிக்கப்பட்டது என்பது புலப்படுகிறது. போருக்குச் செல்லும் முன் மக்கள் நன்றாக வாழவேண்டி நல்ல நாளில் குடையையும், வாளையும் புறவீடு விடுதல் நிகழ்வு நடைபெற்றதை பின்வரும் பாடல்வரிகள் உணர்த்துகிறது.

**“குடையும் வாளும் நாளகோள் அனறி”** **(தொல்.புற. 11)**

தலைவன், தலைவியை தீய இராசிகளின் பொழுது சந்திப்பதைத் தவிர்த்துள்ளனர். இதனைப் பற்றிக் ஆராய்கையில்,

**“மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்**
**துயந்த ஒழுக்கம் கிழவோறகு இல்லை”** **(தொல்.களவி: 1079)**

தொல்காப்பியம் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

தலைவன், தலைவியின் சந்திப்பிற்கு கொடுக்கப்படும் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தகிறது. நாழிகை அறியும் கலையானது சங்க காலத்திற்கு பின்னர் தான் வளர்ச்சியடைந்துள்ளது. தலைவி ஒருத்தி, தலைவன் வரவுக்காத துயருற்று, துயிலாமல் இருக்கின்றான். அப்போது தன்னுடன் யார் துயிலாமல் இருக்கிறார்கள் என்று எண்ணி பார்க்கையில் நாழிகை கணக்கர் தம்நிலை அவள் கண்முன் தோன்றுகிறது. இரவெல்லாம் துயிலாமல் நாழிகை வட்டிலேயே கூர்ந்து நோக்கிக் கொண்டிருத்தலைப் போல் தலைவி, தலைவன் வரும் பொழுதை நினைத்தே வருத்தமுற்றிருக்கிறேன் என்பதை, குறுந்தொகைப் பாடலில்,

**“அஞ்சு வரு பொழுதினாலும் என் கண்**
**துஞ்சா வாழி தோழிக் காவலர்**
**கணக்கு ஆய் வகையின் வருந்தி என்**
**நெஞ்சு புண்ணுற்ற விழுமம் தானே”** **(குறுந்தொகை: 261)**

உணர்த்துகிறது. மேலும், நாள் கோள்களைப் பற்றிக் கூறுகையில்,

**“நாள் கோள் திங்கள் ஞாயிறு கணையழல்**
**ஐந்தொருக்கு புணர்ந்த விளக்கத்தனைய”** **(பதிற்.14)**

என்ற வரிகள் மூலம் அசுவினி, பரணி, என்ற இருப்பத்தேழு நாள் மீன்களைப் பற்றியும், சூரிய குடும்பத்தில் உள்ள புதன், வெள்ளி, புவி முதலான கோள் மீன்கள் பற்றியும், சந்திரன், சூரியனின் சுழற்சி முறையினை பற்றியும் தமிழர்கள் அறிந்து அவற்றின் வாயிலாக கோள்களின் இயக்கத்தினை கொண்டு பருவ கால மாற்றத்தை வகுத்த வீதத்தை,

**“வால்நிற விசும்பில் கோள்மீன் சூழ்ந்த**
**இளங் கதிர் ஞாயிறு”** **(சிறுபாண்: 242 - 243)**

மேற்கண்ட வரிகள் வெளிப்படுத்துகிறது.

நிழலைக் கொண்டு காலத்தை கணித்துள்ளனர். இத்தகைய தொழிந் நுட்பம் பத்தாம் நூற்றாண்டில் தோற்றமாக அமைந்துள்ளது. ஆனால் பழந்தமிர் இத்தொழிந் நுட்பத்தினைப் பல நூற்றாண்டுக்கு முன்னரே இம்முறையினை கையாண்டுள்ளான் என்பதை,

**" விரிகதிர் பரப்பிய வியன்வாய் மண்டிலம்**
**இருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர்பு**
**ஒரு திறம் சாரம் அரைநாள் அமையத்து**
**நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டு" (நெடுநல்: 73- 76)**

இவ்வரிகள் எடுத்துரைக்கிறது.

சூரியன் நிழல் திசையில் மையமாகக் கோல் நடப்பட்டு, அந்த நிழல் திசையினை வைத்து நேரம் கணிக்கிடப்பட்டு, மன்னனுக்கு அரண்மனை கட்டுவதற்கான கால திசையினை கண்டறியப்பட்ட செய்தியினை வெளிப்படுத்துகிறது. மேலும் தலைவனை பிரிந்த தலைவி, வருத்தமுற்று இருக்கையில் தனது அரண்மனையில் வரையப்பட்டு இருந்த ஓவியத்தில், சந்திரனும், ரோகிணியும் இணை பிரியாமல் இருந்ததாகவும், இவ்வாறு தலைவன் என்னைவிட்டு பிரியாமல் இருக்கும் நாள் என்று வருமோ என தலைவி வருத்தமடைவதாக,

**"புதுவது இயன்ற மெழுகுசெய் படமிசைத்**
**தன்நிலை மருப்பின் ஆடதலை ஆக**
**வினைஊர்பு திரிதரும் வீங்குசெல்: மணடிலத்து**
**முரண்மிகு சிறப்பிற் செல்வனோடு நலைஇய**
**உரோகினி நினைவ னள் நோக்கிநெடு துயீரா**
**........... ........... ........... .............. ............" (நெடு.153 – 163)**

இப்பாடல் வரிகள் மூலம் பண்டைய தமிழர்கள் தங்களின் வாழ்க்கையோடு வானியல் முறைகளைப் பொறுத்தி செயல்பட்டான் என்ற செய்தி ஆராய்கையில் புலப்படுகிறது.

**மழைக்கால கோள்நிலை:**

நல்ல மழை பெய்தால் தான், விளைச்சல் பெருகி நாட்டின் வளம் பெருகும். நல்ல மழை பெய்ய சிறந்த கோள்நிலை, தேவை என்பதை உணர்ந்த பண்டைய புலவர்கள் வானில் கோள்கள் இருக்கின்றன என்ற நிலையினை வைத்து கணித்துள்ளனர்.

வானில் எந்தெந்தக் கோள்கள் எந்ததெந்த இடத்தில் நிற்க வேண்டும் என்பதற்குரியதைக் கணித்தும் இந்ததெந்த இடத்தில் நின்றால் உரிய மழை பொழியும் என்ற கணிப்பை கணித்தான் என்பதை,

**"மீன்வயின் நிற்ப வானம் வாய்ப்ப" (பதி.90:1)**

என்ற வரிகள் சான்றாக உள்ளது.

வெள்ளிக்கோளானது தெற்கே நகர்ந்தால் மழைப் பொழியும் என்பதை,

**"வெள்ளி தென்புலத் துறைய விளைவயற்**

**பள்ளம் வாடிய பயனில் காலை" ( புறம்.388: 1-2)**

என மேலே காணப்படும் பாடல்வரி தெரிவிக்கின்றது.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இலக்கண இலக்கிய நூல்களில் அறிவியல் செய்திகள் மிகுதியாகக் காணக்கிடக்கின்றன. சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள பாடல்கள் பெரும்பாலும், பண்டைய காலத் தமிழர்களின் சிந்தனை வழி வானியல் அறிவியல் குறிப்புகளை வெளிப்படுத்துகிறது. மேலும், கோள்களின் இயக்கங்களைப் பற்றிய செய்திகள் நாழிகை கணக்கிடுதல், நன்னிமித்தம் பார்த்தல் ஆகிய வாழ்வியல் கூறுகளையும் வானத்தில் உள்ள கோள்மீன்களின் இயக்கங்களை வைத்தே இயங்கியமையை இலக்கியங்களின் வழி ஆராய்கையில் தெரிய வருகிறது.

**துணை நூல்கள்**

[1.] செவ்வியல் இலக்கியச் சித்திரங்கள் - முனைவர் க. முருகேசன்

[2.] தொல்காப்பியம் மூலமும் உரையும் - இளம்பூரணார் உரை

[3.] சங்க இலக்கியக் கட்டுரைகள், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு,

[4.] தஞ்சை –1984

[5.] ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, புறநானூறு மூலமும் உரையும், கழக

[6.] வெளியீடு

[7.] தி.மகாலட்சுமி, இலக்கியத்தில் சோதிடம், உலகத் தமிழாராய்ச்சி - 2010